**கம்புறுபிடிய பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கம்புறுபிடிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டின் போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத ரூபா 10,558,317 தொகைக்கான கடன் கொடுத்தோரின் கீழ் கொடுப்பனவை சரிசெய்வதற்காக அப்பெறுமதியினால் கடன் கொடுத்தோருக்கு வரவு வைத்திருந்தமையால் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 21,116,634 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | சபைக்குச் சொந்தமான மடத்திற்காக 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 87,108 இற்கான மின்சார பில் பத்திரங்களுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | சபை தீர்மானத்தின் படி பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர் அடங்கிய விஷேட குழு ஒன்று நியமனம் செய்யயப்பட்டு அதன் மூலம் வழங்கப்படும் பரிந்துரையின் அடிப்படை யில் செயலாற்றுவேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கடந்த ஆண்டின் போது ரூபா 97,460 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஒலிபெருக்கி உபகரணத்தை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டில் போது சபைக்குச் சொந்தமான ஆதனங்களை அபிவிருத்தி செய்யும் போது செலவிடப்பட்டிருந்த மூலதனச் செலவு ரூபா 1,568,675 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | முடிவுற்ற வேலைகளின் பெறுமதியை மூலதனப்படுத்த வேண்டும். | மீளாய்வாண்டு செலுத்தப்பட்டிருந்த பெறுமதியினை மூலதனப்படுத்தியிருந்ததுடன் வித்தியாசமானது 10 சதவீத பிடிபணமாகும். |
| (v) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்பளிப்புத் தொகை ரூபா 1,776,119 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 141,827,473 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 105,945,169 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலம் முதல் பதிவேடுகளை சம நிலைப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்பட்டதுடன், பதிவேடுகளை சமநிலைப்படுத்தி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகள் முதல் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 1,168,845 தொகைக்கான தொங்கல் கணக்கில் செலவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2006 ஆண்டு முதல் காணப்படுவதுடன் அதனை சரி செய்வதற்கு தேவையான பதிவேட்டுத் தகவல்கள் காணப்படவில்லை. |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 108,713,194 தொகை பெறுமதியான 13 கணக்கு விடயங்கள் தொடர்பான சான்றுகள் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணிகள் மற்றும் கட்டடங்கள் உரிய பதிவேட்டில் உட்படுத்துவற்கு நடவடிக்கை எடுத்ததுடன் நீண்ட காலம் முதல் காணப்படும் சிக்கல்களை தீர்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரிகள் செலுத்தத் தவறும் நபர்கள் தொடர்பான அட்டவணை ஒன்று மற்றும் | விதியின் பிரகாரம் செயற்பட | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆதனங்களை தடைசெய்யும் எழுத்தானை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (ii) | விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் கூட்டப்பட்டு கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்கு டன் சீராக்கல் செய்யப்பட் டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2012 மற்றும் 2012 ஜனவரி 05 ஆம் திகதிய சுற்றறிக்கை | சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு ஒப்பந்த வேலைகள் சாட்டும் போது தகைமைப் பரிசோதனை மேற்கொள்ளாமல் சங்கங்களுக்கு நிர்மான வேலைகள் நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,188,811 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,301,021 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,912,040 | 2,802,319 | 2,897,024 | 1,432,237 | 2,279,258 | 2,626,520 | 2,419,218 | 1,526,942 |
| வாடகை | 13,987,800 | 8,042,270 | 7,833,020 | 1,216,748 | 7,334,109 | 6,726,806 | 7,373,009 | 1,007,498 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 702,000 | 1,257,178 | 1,104,628 | 252,945 | 982,450 | 1,679,271 | 1,664,671 | 100,395 |
| ஏனைய வருமானங்கள் | 30,557,224 | 49,460,000 | 52,485,479 | 31,572,543 | 6,730,000 | 26,713,512 | 11,857,099 | 34,598,022 |
| மொத்தம் | 48,159,064 | 61,561,767 | 64,320,151 | 34,474,473 | 17,325,817 | 37,746,109 | 23,313,997 | 37,232,857 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி** | | |
| மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீதவரி மீதி ரூபா 1,199,595 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,493,841 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகை கட்டணத்துடன் ரூபா 2,693,437 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,522,983 தொகை ஆகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,170,454 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2018 பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் வீதவரிக்கான சிட்டையிடல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் பல வருட காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 140,660 தொகைக்கான நிலுவைத்தொகை பதிவேடுகளில் இருந்து பதிவழிப்பதற்காக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 327,347 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 23,988 தொகையுடன் ரூபா 351,335 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 19,899 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 331,436 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் மூலம் இனங்காணப்பட்ட காணிகள் துண்டுகளாக பகிரப்பட்ட பின்னர் ஏக்கர் வரி உரிமையாளரின் பெயர் வருமானப் பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்காக சபைக்கு சமர்பிக்கப்பட்டிருந்துடன் மேலும் நிலுவைகளை அறவீடு செய்வதற்கும் காணிகள் தொடர்பான சரியான தரவுகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுகின்றது. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **கடை வாடகை**<br>ஆரம்ப நிலுவை ரூபா 1,002,739 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 8,162,891 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 9,165,630 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 8,146,486 தொகை ஆக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,019,144 தொகை நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக இணக்கசபையில் வழக்குத் தாக்கல் செய்தல், ஞாபகமூட்டல் கடிதம் அனுப்புதல், வெளிக்களத்தில் பணம் அறவீடு செய்தல் ஆகிய விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் நீண்ட காலமாக தவணைகளாக அறவிடப்படும் நிலுவைத் தொகை இந்த நிலுவை மீதியில் அடங்குகின்றன. |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,309,037 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 28,182,574 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை பெறுவதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து விண்ணப்பித்துள்ளேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்** | | |
| சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பை வகைப்படுத்தப்படாமல் கம்புறுப்பிட்டி நகரத்தில் சந்தையின் பிற்பகுதியில் காணப்படும் காணி ஒன்றில் முறையற்ற விதமாக குவிக்கப்பட்டு காணப்பட்டது. | முறைசார் விதமான குப்பை போடப்பட வேண்டும். | பொருத்தமான காணி ஒன்று உரிமையாக்கப்பட்ட பின்னர் தற்போது குப்பை போடும் இடத்தை அகற்றிக்கொள் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 49 மற்றும் 52 இன் பிரகாரம் 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான 53 அங்கீகாரமற்ற நிர்மான வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அங்கீகாரமற்ற நிர்மான வேலைகள் தொடர்பான பதிவேட்டை முறைப்படுத்துவதற்கும் அதன் பிரகாரம் அங்கீகாரமற்ற வேலைகளை பரிசோதனை செய்வதற்கும் அவற்றை அகற்றுதல் தொடர்பான முறையான வேலைத்திட்டமொன்று எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | அங்கீகாரம் இன்றி நடாத்தப்பட்டு வந்த 167 செங்கல் செயற்திட்டங்கள் அதிகாரப் பிரதேசத்தில் செயற்பட்டதுடன் அவற்றின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சுற்றாடலுக்கு சேதம் விளைவிக்கக் கூடிய வியாபாரங்களை நடத்தாமல் இருப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கஹகல பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதார வழி செங்கல் கைத்தொழில் ஆக காணப்பட்டதுடன் செங்கல் கைத்தொழில் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக விசாரனை மேற்கொள்ளல் பிரதேச சபையினால் மாத்திரம் மேற்கொள்ளக்கூடிய கருமம் ஒன்று அல்ல. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 12 வெற்றிடங் களை நிரப்புவதற்கும், 04 மிகை பதவியணியினை முறைப்படுத்து வதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பதவியணி பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப் பதவி களை முறைப் படுத்தவும் வேண்டும். | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தவிர ஏனைய மிகைப்பதவிகள் அனைத்தும் நி.பி. 71 இன் பிரகாரம் செயற்பட்டு வருவதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளவதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) சேர்க்கப்பட்டிருந்த சுகாதார மற்றும் பாதைத் தொழிலாளர்களுக்கு உரிய கடமை சாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காத காரணத்தினால் குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரதியீட்டு அடிப்படையில் புதிய ஊழியர்கள் சேர்க்கப்பட்டமையால் சபைக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,842,280 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்க நேரிட்டிருந்தது. | உரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். | தற்போது அனைத்து பாதை மற்றும் சுகாதார தொழிலாளர்களுக்கு கடமை சாட்டுதல் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் பாதைத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் சாட்டப்படும் வேலைகள் தொடர்பான விபரங்கள் முறைப்பிரகாரம் பதியப்படுகின்றது. |
| (இ) **ஊழியர் கடன்**<br>மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 199,739 தொகைக்கான நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊளியர் கடன் மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இது நீண்ட காலம் எடுக்கக்கூடிய செயற்பாடு ஒன்றாகும். |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2014 மார்ச் 20 ஆந் திகதிய திட்டக்குழு தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த இலக்கம் BA/2014/05 கட்டட அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் வர்த்தகப் பயன்பாட்டுக்காக 1306.93 | உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். | கட்டடத்தின் உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| | சதுரமீற்றருக்கான நான்கு மாடிக் கட்டடத்தின் வரைபில் வாகன தரிப்பிடங்கள் 06 சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் வாகனங்கள் தரிப்பதற்காக 01 இடம் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி மற்றும் சமூக நில அபிவிருத்தி அமைச்சின் 2009 ஏப்ரல் 17 மற்றும் 1597/08 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்பாட்டை மாற்றுவதற்காக தரிப்பிடம் ஒன்றிற்கு ரூபா 500,000 தொகை வீதம் 05 வாகன தரிப்பிடங்களுக்காக ரூபா 2,500,000 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (ஆ) | இலக்கம் BA/2018/62 மற்றும் இலக்கம் BA/2014/05 அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டட வரைபுகளுக்கு இணங்காமல் மேற்கொள்ளப்பட்டிருந்த கட்டட நிர்மான வேலைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் இலக்கம் 1597/08 மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் V உபபிரிவின் 6(ii) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 14 நாட்களுக்குள் நிர்மான வேலையை சட்டரீதியாக்கிக் கொள்ளும் படி உரிமையாளருக்கு அறிவித்துள்ளேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகாரம் இன்றி பயன்படுத்தப்பட்டு வந்த சபைக்குச் சொந்தமான 02 ஏக்கர் அளவைக் கொண்ட பெதும்கம எனும் காணி தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். | இந்தக் காணியின் உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமாக இருந்தமையால் காணியின் உரிமையை உரித்தாக்குவதற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்துள்ளேன். |

### 3.6 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பஸ் தரிப்பிடம் மற்றும் விளையாட்டுத்திடல் இடையே வலைவேலி நிர்மானிப்பதற்காக வேலை விடயம் 01 இன் கீழ் Supplying and fixing 50X50 P.V.C 5'11" height wiremesh (Gage 10) 236.88 சதுரமீற்றருக்காக ரூபா 940,887 தொகை கொடுப்பனவு செய்து இருந்த போதிலும் அந்த வேலை விடயத்தின் கீழ் 201.06 தொகை சதுரமீற்றர் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 35.82 சதுரமீற்றர்களுக்காக ரூபா 142,277 தொகை (35.82x3972) மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்பட்டுள்ள வேலைப்பகுதியின் அளவுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். | ரூபா 94,947 இற்கான பிடிபணம் விடுவிக்கப்படாது இருந்ததுடன் மிகையாக செலுத்திய தொகைக்காக அந்த தொகையை பதிலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |